★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 மாசி 3 ஐ. அல் 12 இதழ் 4
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-2-84

## திருச்சி-யாழ். விமான சேவைக்கு அரசு மறுப்பு

(கொழும்பு)

திருச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து தரித்துச் செல்லக்கூடிய விதத்தில் இந்திய விமானச்சேவையொன்று அனுமதிகோரி இந்திய அரசு விடுத்திருந்த கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

பந்தோபஸ்து காரணங்களுக்காக இந்த சேவையை நடத்துவது சாத்தியமாகாதென இலங்கை அரசு தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

இதே சமயம் யாழ்ப்பாணம்-திருச்சி விமானசேவைக்கு அனுமதி மறுக்கப்படுமானால் இலங்கை விமானங்கள் இந்தியாவில் ஒரு இடத்தில் மாத்திரமே தரித்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்று டாக்டர் ஜனார்த்தனன் இந்திய விமானசேவை நிறுவனத்தை வற்புறுத்தியிருக்கிறார்.

தமிழ்ப் பிரயாணிகள் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதானால் கொழும்பு சென்று ரயில் அல்லது பஸ்

(8ம் பக்கம் பார்க்க)

# சங்கானை மக்கள் வங்கியில் ரூ. 50 லட்சம் கொள்ளை!

## தமிழகத்தில் வேலைநிறுத்தம்

[சென்னை]

தமிழகத்தில்நேற்றுதொழிற் சங்கங்கள் ஏற்பாடு செய் திருந்த வேலைநிறுத்தம் காரண

(8-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி இளைஞர்கள் நள்ளிரவில் துணிகர நாடகம்!

### விசாரணைகளை நேரில் கவனிக்க வங்கித் தலைவர் யாழ். விஜயம்

[நமது அலுவலக நிருபரும், பண்டத்தரிப்பு நிருபரும்]

**சங்கானை மக்கள் வங்கியில் திங்கட்கிழமை நள்ளிரவு, ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன!**

**சுமார் 25 இளைஞர்கள், இராணுவ உடையில் வங்கிக்குச் சென்று காவலாளிகளைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி, கட்டிப்போட்டுவிட்டு இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.**

வங்கியிலுள்ள மூன்று இரும்புப்பெட்டிகளில் ஒன்றை அடைவு நகைகளுடன் கொண்டுசென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கொள்ளைக்கு இரண்டு வான்களும், லொறி ஒன்றும் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இக்கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு வான்களும் நெல்லியடியில் நேற்றுக் காலை அநாதரவாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

லகம் யாழ் அபிவிருத்திச் சபை சங்கானை உப அலுவலகம், சங்கானைச் சந்தை ஆகிய ஸ்தாபனங்களில் காவலாளிகளாகக் கடமை புரிந்து கொண்டிருந்தவர்கள் எல்லோரையும் தமது வானில் துப்பாக்கி முனையில் ஏற்றி மக்கள்வங்கி மேல் மாடியில் பணயம்வைத்துவிட்டு வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டார்கள்

[8-ம் பக்கம் பார்க்க]

### நமது சங்கானை நிருபர் அறிவிப்பதாவது

துப்பாக்கி இளைஞர் கோஷ்டி திங்கட்கிழமை இரவு பதினொரு மணியளவில் இரு வான்களில் சென்று, சங்கானை மக்கள்வங்கி வளவுக்குள் குடியிருக்கும் வங்கிக் கட்டட உரிமைக்காரர்களையும், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், உதவி அரசாங்க அதிபர் செய

## இந்தியா சென்றிருந்த 35,000 இலங்கையரில் 14,000 பேர் திரும்பினர்

### தமிழக ஆளுநர் தகவல்

[சென்னை]

''ஜூலை கலவரங்களின் போது இந்தியாவுக்குச் சென்றிருந்த சுமார் 35 ஆயிரம் பேரில் 14 ஆயிரம் பேர் இலங்கை திரும்பிவிட்டார்கள்.''

இத்தகவலை தமிழ் நாடு ஆளுநர் திரு. எஸ். எஸ். குரானா தெரிவித்துள்ளார்.

கலவரத்தின்போது தமிழ் நாடு திரும்பிய 35396 பேரில் 14336 பேர் இலங்கை திரும்பிவிட்டனர் என்றும் மீதியுள்ளோர் முகாம்களிலும், வேறு இடங்களிலும் தொடர்ந்து இருந்துவருகிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## காரைநகர் வாலிபர் மரணம் கொலையா?

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் கடந்த சனிக்கிழமை இரவு சுருக்கிட்ட நிலையில் காணப்பட்ட வாலிபரின் மரணம் கொலை எனச் சந்தேகிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் ஊரிக் கிராமத்தைச்சேர்ந்த அரியகுட்டி இராசேந்திரன் என்ற இளைஞரின் மரணம் சம்பந்தமாக மரண விசாரணை அதிகாரி திரு.கந்தசாமி நேற்று முன்தினம் மரண விசாரணை நடத்தியிருந்தார்.

பிரேத பரிசோதனை செய்த ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி டாக்டர் குகதாசன், சுருக்கிடப்பட்டு கழுத்துநெரிக்கப்பட்டமையால் ஏற்பட்ட மூச்சுத் திணறலால் இம் மரணம் சம்பவித்ததாக குறிப்பிட்டிருந்தார். ஊர்காவற்றுறைப் பொலிஸ் சார்ஜன்ட் சிவலிங்கம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

இறந்தவரின் தந்தையாரான முருகன் அரியகுட்டி நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் தனது மகனின் மரணம் கொலையெனத் தான் சந்தேகிப்பதால் நீதிபதி இது தொடர்பாக விசாரணைசெய்ய வேண்டுமெனக்கோரி ஓர் மனுவைத் தாக்கல் செய்தார்.

இதையடுத்து இம்மனு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு பி. பாலவடிவேல் முன்நிலையில் பரிசீலனைக்கு எடுத்

(8ம் பக்கம் பார்க்க)

## அந்ரபோவின் பூதவுடல்

### செஞ்சதுக்கத்தில் நல்லடக்கம்

[மாஸ்கோ]

காலஞ்சென்ற சோவியத் அதிபர் யூரி அந்ரபோவின் பூதவுடல் சோவியத் யூனியனின் முக்கிய நகரங்கள் பதாறும் பீரங்கி முழங்க பூரண மரியாதைகளுடன் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

செஞ்சதுக்கத்தில் லெனின் கல்லறைக்கு அருகே பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் மாஸ்கோ நகரே மூன்று நிமிடங்கள் அசையாது நின்றது போலவொரு அமைதி நிலவியது.

பின்னர் பீரங்கிகள் முழங்க பூதவுடல் நல்லடக்கம்செய்யப்பட்டது

பூதவுடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்துவதற்காக 70நாடுகளின் தலைவர்கள் மாஸ்கோ வந்திருந்தனர். [கு]

## பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் ஜனாதிபதியை இன்று மீண்டும் சந்திப்பார்கள்

[ஏ. வி. மாணிக்கம்]

பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ள முதலாம் வருடப் பொறியியல் மாணவர்கள் 46 பேரும் தங்கள் நிலைமைகளை குறித்து ஜனாதிபதிக்கும், உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் தனித் தனியே தந்திகளை அனுப்பிவைத்துள்ளனர்

இன்று புதன்கிழமை ஜனாதிபதியுடனான 2 வது சந்திப்பின் போது; இடம் பெயர்ந்த மாணவர்கள் குழு மேற்குறிப்பிட்ட பிரச்னைபற்றியும் பிரஸ்தாபிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியம் தமது எதிர்கால நிலைமை குறித்து யாழ் பல்கலைக்கழகத்தில் கூடி ஆராய்ந்தது இக்கூட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து திரும்பிய பொறியியல் பீட முதலாம் வருடத்தைச் சேர்ந்த மாணவர்களும் கலந்துகொண்டனர்

இக்கூட்டத்தில் மேற்படி

(8-ம் பக்கம் பார்க்க)

## வான் உரிமையாளர் சுடப்பட்டு வான் கடத்தப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் நேற்று முன்தினமிரவு நடந்த வான் கொள்ளைச் சம்பவத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில்வான் உரிமையாளர் மயில்வாகனம் மகாநந்தன் படுகாயமடைந்தார்.

இவர் நேற்று முன்தினமிரவு உடனடியாக யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

நேற்று முன்தினமிரவு 9-45 மணியளவில் பிறவுண் வீதியிலுள்ள திருமதி பொன்மணி தர்மலிங்கம் வீட்டில் இச்சம்பவம் நடைபெற்றது வீட்டுக்காரருடன் யாழ். வீதியைச் சேர்ந்த மயில்வாகனம் மகாநந்தன், தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த போது 3 இளைஞர்கள் வந்து வானைக் கேட்டதாகவும் 'எதற்காக?' என்று கேட்டபோது அவரை நோக்கிச் சுட்டுவிட்டு, வானைக் கொள்ளையடித்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது

உடனடியாகக் காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்

யாழ் குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு முத்துத்தம்பி விசாரணையை மேற்கொண்டார்.

நேற்றுக்காலை இந்தவெள்ளை நிறவான், வைமன் வீதி

(8-ம்பக்கம்பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நீர்வேலி வடக்கில் வல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் காளி கோவிலுக்கு அருகாமையில் (½) அரை பரப்புக் காணியும் சகல வசதிகளுடன் கடைக் கட்டிடமும் விற்பனைக்குண்டு. ச. சின்னத்தம்பி (அப்பாத்துரை) நீர்வேலி வடக்கு. [810]

86 ஸ்ரீ தொடரிலக்க ஹொண்டா M B 80 மோட்டார்சைக்கிள் விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும். C B. அன்ரனி, தாரந்தனை, ஊர்காவற்றுறை (791)

நல்ல நிலையில் உள்ள 70 ஸ்ரீ 8942 குபேட்டா லான்மாஸ்டர் ரெயிலர், கலப்பை ஆகியவற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. M. K. செல்லத்துரை, அலுமேனியத்தொழிற்சாலைமுன், மாவிட்டபுரம் 807

மல்லாகம் K K S. வீதிக்கு அருகாமையில் 5 பரப்பில் அமைந்த விசாலமான வீடு விற்பனைக்குண்டு. கொம்பனி நடத்தவும் வசதியானது. தொடர்பு: S. M. சுப்பிரமணியம், நீலிளம்பனை, மல்லாகம் 790

## யாழ்ப்பாணம் - மாநகரசபை
## சிலை நிறுவுதல்
## அறிவித்தல்

இலங்கை முற்போக்குத் தமிழர் தேர்தல் இயக்கம், திருவள்ளுவர் மகாசபை ஆகியவற்றின் விண்ணப்பப்பிரகாரம் சேர் வைத்திலிங்கம் துரைசாமி வீதி-காங்கேசன்துறை வீதிச் சந்தியின் தென்கிழக்கு மூலையில் மறைந்த திரு. ஜோவல் போல் அவர்களுக்கு ஒரு சிலை நிறுவுவதற்கு அனுமதி வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுளது.

எனவே, இது சம்பந்தமாக எவராவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பினால் இன்றிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் ஆட்சேபனைக்கான காரணங்களைக்காட்டி விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சீ. வீ. கே. சிவஞானம்
மாநகராட்சிமன்ற ஆணையாளர்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
10-02-84 792

## விற்பனைக்கு

நல்ல இனத்து அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்க. 11/1, ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23656. 755

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகில் வீடு கட்டுவதற்கு உகந்த 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: தா. பொன்னம்பலம், சோதி வேம்படி ஒழுங்கை, மானிப்பாய் 756

வரகு மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நேரிலும் கொடுக்கப்படும், தொடர்பு: அ. குமாரவேலு, 132/1, கச்சேரி—நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 785

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு அருகாமை - 10½ பரப்பு சதுரக் காணி - உரித்து நல்லது. இரு துண்டுகளாக அல்லது முழுவதும் கே. கே. எஸ். வீதியிலிருந்து 150 யார் உள்ளே சிதம்பர உடையார், பன்னாலை, தெல்லிப்பளை. 758

காங்கேசன்துறை பட்டின சபை எல்லைக்குள் தபாலகத்தோர் பாடசாலை சந்தை என்பவற்றுக்கண்மையில் மின்சார வசதியுள்ள 4 பரப்புக் காணியும் வீடும் - புகையிரத நிலையத்துக்கண்மையில் கிணறு, மலகூடம் என்பவற்றுடன் கூடிய மூன்று பரப்புக் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு தொடர்பு: வெ சுந்தரமூர்த்தி "நளினி", அளவெட்டி வடக்கு, அளவெட்டி. 773

## வாடகைக்கு

பருத்தித்துறை பிரதான வீதியில் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் கடைகள் இரண்டு வாடகைக்குண்டு விபரங்களுக்கு: P. இரத்தினசபாபதி, 46, பிரதானவீதி, பருத்தித்துறை. [805]

## சேவை

உமது விருடிகோலில் வாங்கும் கலர் பிலிம் சுருளை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இலவசமாக வழங்கப்படும். Processing ரூபா 80/- P. C. Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம் 502

## தேவை

மணிக்குரல் விளம்பர சேவையில் கடமையாற்ற பெண் அறிவிப்பாளர் தேவை. உங்கள் விண்ணப்பங்களை 20-02-84 முன்னதாக அனுப்பி வைக்கவும். நிர்வாகி மணிக்குரல் விளம்பர சேவை, பஸ் நிலையம். யாழ்ப்பாணம். 800

யாழ்ப்பாண வேளாளஇந்து மதத்தைச் சேர்ந்த எனது மருமகளுக்கு வரன் தேவை. வயது 35 நிறமான அழகான பெண். அரசாங்க ஊழியர். சீதனம் வீடு, நகை, காசு கொடுக்கப்படும். ஏழில் செவ்வாய், சனி. தகுந்த பதவியில் உள்ளவர்கள் சாதகத்துடன் என்னுடன் தொடர்பு கொள்ளவும். வயிரவநாதன், கட்டுடை, மானிப்பாய். 809

அனுபவம் மிக்க சமையல்காரர்தேவை. அகதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் நேரில் வரவும். ராகுலசூரியன்ஸ் இல. 122பிரதான வீதி. பருத்தித்துறை. 759

ஆங்கிலம் தெரிந்த ரைப்பிஸ்ட் ஆண் தேவை. ஓய்வூதியம்பெற்றவர் விரும்பத்தக்கது. பாதுகாப்புசேவைக்கு பொலீஸ்சேவையில் இருந்து ஒய்வுபெற்றவரும் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 770, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 770

## பின்னுறுதிக்கட்டளை
## பற்றிய
## அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசாமி நாகலிங்கம் பெண் வள்ளியம்மையின் மரணசாதனவிடயமாக

- காலஞ்சென்றவர்

குமாரசாமி நாகலிங்கம், பிரதான வீதி, பருத்தித்துறை.

- மனுதார்

வழ இல. 1086 ரீ

எதிராக

தெய்வப்பிள்ளை மாணிக்கம், பிரதானவீதி, பருத்தித்துறை.

- பிரதிவாதி

தெய்வப்பிள்ளை மாணிக்கம், பிரதான வீதி, பருத்தித்துறை.

- பிரதிவாதி-மனுதார்

எதிராக

குமாரசாமி நாகலிங்கம், பிரதான வீதி, பருத்தித்துறை.

-மனுதார்-பிரதிவாதி

மேலே இலக்கம் கொண்ட மரணசாதனச் சொத்தினதும் உரிமைப் பொருட்களினதும் விடயமாக வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் ஆதனங்கட்கும், ஆஸ்திகளுக்கும் பரிபாலன அதிகாரத்தத்துவப் பத்திரம் பெறுவதற்கு மேற்படி மன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறியப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு மாசி மாதம் 21-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1984ம் ஆண்டு மாசி மாதம் 9ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்

வரைவு
R. R தர்மரட்ணம்
பிரதிவாதி மனுதாரின் சட்டத்தரணி
806

## கார் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

கடத்தப்பட்ட கார் ஒன்று யாழ். செயலக பின்பக்கமாகவுள்ள வீதியில் அனாதரவான நிலையில் நேற்றுக்காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இக்காரின் சாவியும் இருந்த நிலையிலேயே கைவிடப்பட்டிருந்தது.

மேற்படி கார் கடந்த 11ம் திகதி இரவு கோப்பாய் ராஜ வீதியில்வைத்து இனந்தெரியாத 8 நபர்களால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டதாக சுன்னாகம் பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இக்கார் யாழ். பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. (மா)

## யாழ். கல்வி மாவட்டத்தில் ஆங்கில தட்டெழுத்துசுருக்கெழுத்துப் பயிற்சி நெறியினைப் போதிப்பதற்கு போதனாசிரியர்கள் தேவை

1. கல்வித் தகைமைகள்:-

(அ) க. பொ. த (சா. த) பழைய/புதிய பாடத் திட்டத்தில் 6 பாடங்களுள் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி.

அல்லது

(ஆ) தே. க. பொ. த சாதாரப் பத்திரப் பரீட்சையில் குறைந்தது 6 பாடங்களில் 'இ' பிரிவில் சித்தியும் அதில் ஆங்கிலத்தில் 'பீ' பிரிவில் சித்தியும்.

அத்துடன்

2. ஆங்கில தட்டெழுத்துச் சுருக்கெழுத்துப் பயிற்சி நெறி பயின்றதற்கு தொழில் நுட்பக் கல்லூரி அல்லது வேறு தொழில் நுட்ப நிறுவனங்களால் வழங்கப்பட்ட தகைமைச் சான்றிதழ்கள்.

3. பயிற்சிநெறி நடைபெறவுள்ள பாடசாலைகள்:-

(அ) யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.
(ஆ) யா/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
(இ) யா/இந்து மகளிர் கல்லூரி. யாழ்ப்பாணம்.
(ஈ) யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(உ) யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.
(ஊ) யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.
(எ) யா/நெல்லியடி ம. ம. வி.

4. விண்ணப்பங்கள் யாவும் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 29-2-84ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப் படல்வேண்டும்.

ஒப்பம்
ம. சிமியாம்பிள்ளை
808 யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர்.


# றிக்கோ

அழைக்கிறது!

புரியாணி பிரியர்களுக்கு
மற்றுமொரு
சுவையான செய்தி!

வாடிக்கையாளர்களின் அன்புக் கோரிக்கை மீது
'றிக்கோ' கோழிப் புரியாணி
மதிய நேரத்தில்
'றிக்கோ' ஹோட்டலில் வழங்கப்படும்.

ஆமாம்; இதுவரை ஆடர் கொடுத்து
பார்சலில் கோழிப்புரியாணியைப்
பெற்றுக்கொண்ட நீங்கள்
இன்று முதல்
'றிக்கோ' ஹோட்டலில்
கோழிப் புரியாணியை
சுவைத்து மகிழலாம்.

றிக்கோ ஹோட்டல்
370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22464, 23889
822



# TELEFUNKEN
20" COLOR T. V.

தயாரிப்பு — மேற்கு ஜெர்மனி
விலை — 13,875/-
இலவசம் — ஓர் அன்ரனா

5% விசேஷ கழிவு

இச்சலுகை கையிருப்பு
முடியும் மட்டுமே.

CANTABIA LTD.
21, Main Street, Jaffna.
PHONE: 24201

## யூரிஅந்ரபோவ் மரணச்சடங்கு:

# பிரதமர் இந்திராகாந்தி மாஸ்கோ வந்தடைந்த முதலாவது உலகத்தலைவர்!

### நரசிம்மராவ், ஜி. பார்த்தசாரதி கூடவந்தனர்!!

மாஸ்கோ, பெப் 14

சோவியத் அதிபர் அந்ரபோவின் மரணச் சடங்குகளில் பங்குபற்ற மாஸ்கோ வந்தடைந்த முதலாவது உலகத் தலைவர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி யாவார்.

இவர் நேற்று முன் தினம் இங்கு வந்து சேர்ந்தார். இவருடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ், சிறப்புத் தூதுவர் திரு. கோபால சுவாமி பார்த்தசாரதி ஆகியோரும் மாஸ்கோ வந்துள்ளனர்.

சோவியத் யூனியனின் முதலாவது துணைப்பிரதமர் திரு அக்கிப்போவ் திருமதி இந்திரா காந்தியையும் அவரது குழுவினரையும் மாஸ்கோ விமான நிலையத்தில் வரவேற்றார்.

சோவியத்துக்கான இந்திய தூதுவர், இந்தியாவுக்கான சோவியத்தூதுவர் உட்பட வேறுசில இந்திய சோவியத் ராஜதந்திரிகளும் இந்தவரவேற்பில் கலந்து கொண்டனர்.

பதினைந்துமாதங்களுக்கு முன்னர் முன்னாள் சோவியத் அதிபர் லியோனிட் பிரஷ்நெவ்வின் மரணச் சடங்குகளில் கலந்து கொண்ட உலகத்தலைவர்களிலும் இந்தியப் பிரதமரே முக்கியம் பெற்றிருந்தார். ஆயினும் திருமதி காந்தி அச்சடங்குகளில் பூரணமாகப் பங்குபற்றமுடியவில்லை. ஏனெனில் அவ்வேளையில் இந்திய பூதான இயக்கத்தலைவர் வினோபாவே காலமானதால் அவர் உடன் தாயகம் திரும்ப வேண்டியிருந்தது.

பிரஷ்நெவ்வின் மரணச் சடங்குகளில் பங்குபற்றிய உலகத்தலைவர்கள் திரு. அந்ரபோவுக்கு ஆறுதல் கூறிச் சென்றனர். அவர்களில் இந்திராவும் ஒருவர் திரு. அந்ரபோவ் அப்போது திருமதி காந்தியுடன் மட்டுமே கூடுதல் நேரம் சம்பாஷணை செய்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

அந்ரபோவின் மரணச் சடங்குகளில் பங்கு பற்றும் திருமதி இந்திரா காந்தியின் மாஸ்கோ விஜயம் குறித்து சோவியத் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்ரெட்தாட்சர் அமெரிக்க உபஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் ஆகியோர் மரணச்சடங்குகளில் பங்குபற்றும் மேற்கத்திய தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சீனப்பிரதமர் திரு. வென்ஸி பாகிஸ்தான் ஜனாதிபதி திரு. ஷியாவுல் ஹக் ஆகியோரும் மாஸ்கோ வந்திருந்தனர். (கி)

## ஆற்றுப்'பாதை'யில் ஏறிய பஸ் வண்டி சறுக்கி ஆற்றில் விழுந்தது!

### 30 பேர் பலி, 65 பேர் படுகாயம்

டாக்கா, பெப். 14

பங்களாதேஷில் ஆற்றைக் கடக்க உதவும் பாதையொன்றில் பஸ்வண்டியொன்று சறுக்குண்டு ஆற்றில் வீழ்ந்ததால் 30பேர் கொல்லப்பட்டனர். 65பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று மேக்னு என்ற இடத்தில் நிகழ்ந்தது. இந்த இடம் டாக்காவிலிருந்து 40 கிலோ மீட்டர்கள் தொலைவில் உள்ளது.

மழைபெய்ததால் ஆற்றுப் பாதை மிகவும் ஈரமடைந்திருந்தது இதன்மீது விபத்துக்குள்ளான பஸ்வண்டி ஏறிய போது அதுசறுக்குண்டு தலைகீழாக ஆற்றினுள் குடைசாய்ந்தது. இதனைத் தொடர்ந்து அதில் இருந்த முப்பது பேர் நீரில்மூழ்கி மரணமடைந்தனர். 65 பேர்வரை காயமடைந்தனர்.

அப்பஸ்வண்டியில் அளவுக்கதிகமான பயணிகள் இருந்தனர் என்று கூறப்பட்டது. இதனாலேயே அப்பஸ்வண்டி மிதமிஞ்சிய பாரத்தினால் அப்பாதை மீதுசறுக்குண்டு, தடம் புரண்டது என்று கருதப்படுகிறது. (கி)

## ''யாழ். இந்துக்கல்லூரியின் உடனடித்தேவைகள் இரண்டு ஒய்வுபெறும் அதிபர்கருத்து''

(யாழ்ப்பாணம்)

''ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தொன்பதாம் ஆண்டு எட்டுவயதுச் சிறுவனாக-மாணவனாக யாழ் இந்துக் கல்லூரியில் காலடி எடுத்து வைத்தேன். 1984இல் கல்லூரியின் அதிபர் பதவியிலிருந்து ஒய்வுபெறுகிறேன். ஆனாலும் இந்துக்கல்லூரி சமூகத்தைச்சேர்ந்தவன் என்ற தொடர்பு என்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் பதவியிலிருந்து ஒய்வுபெறும் திரு. பீ எஸ். குமாரசாமி நேற்று கல்லூரியில் தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை கூட்டத்தில் பதிலுரை வழங்கும்போது கூறினார்.

பதில் அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் மாணவர்களும் ஆசிரியர்களும்

(7-ம் பக்கம் பார்க்க)

## வெள்ள நிவாரணம் கோரி விண்ணப்பம்

(துணுக்காய்)

இவ்வருடம் பெய்துவரும் கடும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள யோகபுரம் கிராமமும் பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக யோகபுரம் கிராமசேவை அலுவலர் திரு. கு. ஞானேஸ்வரன் தனது பிரிவில் 800 குடும்பத்திற்கும், துணுக்காய் பிரிவில் 450 குடும்பத்திற்கு உடனடி வெள்ள நிவாரணம் கோரிமேலிடத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

## சிறுமி மரணம்

(துணுக்காய்)

யோகபுரம் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகராசா யோகலட்சுமி (வயது 11) என்ற சிறுமி கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமானார்.

யோகபுரம் கிராம சேவை அலுவலர் திரு. கு. ஞானேஸ்வரன் மாங்குளம்பொலிசாருக்கு ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடாத்தினர்.

யோகபுரம் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வி. வேதநாதன் மரணவிசாரணையை மேற்கொண்டு கிணற்றில் வீழ்ந்ததால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## ஈரான்-ஈராக் போர் நிறுத்தம்:

# ஐ. நா. கூடுதல் கவனம் செலுத்த ஆரம்பம்!

### விசேட குழுவொன்றும் அமைப்பு!

பக்தாத், பெப் 14

ஈரான்-ஈராக் ஆகியவற்றுக்கிடையிலான வளைகுடாப் போரை நிறுத்துவதில் ஐ நா. கூடுதல் கவனமெடுத்துள்ளது. இதற்கென ஐ. நா. செயலாளர் விசேட குழுவொன்றையும் அமைத்துள்ளார்.

இக்குழு ஈரான்-ஈராக் ஆகியவற்றில் உள்ள யுத்தப் பிராந்தியங்களைப் பார்வையிடும். அங்குள்ள சேதங்கள் மற்றும் அழிவுகள் சம்பந்தப்பட்டவற்றை ஒரு அறிக்கையாக ஐ. நா. சபைக்கு இது சமர்ப்பிக்கும்.

அந்த அறிக்கையின் அடிப்படையிலேயே ஐ நா. செயலாளர் திரு ஜாவியர் பெரஸ்டி கொய்லர் தமது சமாதான நடவடிக்கைகளைத் திட்டமிடுவார்.

ஈரான்-ஈராக் யுத்தம் கடந்த சுமார் மூன்றுண்டுகாலமாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ் யுத்தத்தினால் இதுவரை கோடிக்கணக்கான பணம் இருநாடுகளுக்கும் செலவாகியுள்ளது. சிறுவர்கள், இளைஞர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். யுத்தப் பிராந்தியங்கள் தவிர்ந்த குடியிருப்புப் பகுதிகளிலும் சேதங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனைத் தொடர்ந்தே ஐ நா. வின் கவனம் வளைகுடாப் பக்கம் திரும்பியுள்ளது.

ஜப்பான் ஈரான்-ஈராக் ஆகியவற்றிடம்போரைக் கைவிடும்படி கேட்டது. ஆனால் இவை இக்கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டன. (கி)

# 5 வங்கிக் கிளைகளுக்கு இன்றுடன் மூடுவிழா!

### மூடவேண்டாம் என்று குமார் கோரிக்கை

(கொழும்பு)

''வடபகுதியில் ஐந்து மக்கள் வங்கி கிளைகள் இம்மாதம் 15-ம் தேதி (இன்றுடன்) மூடப்படுவதால் அப்பகுதியில் வாழும் மக்கள் பாதிக்கப்படுவார்கள். இதுபற்றி விசாரணை செய்து அங்கு வங்கிகளை தொடர்ந்து இருக்க நடவடிக்கை எடுக்கவும்.''

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு குமார்பொன்னம்பலம் நேற்று அனுப்பிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது ''வடபகுதியிலுள்ள நெல்லியடி புங்குடுதீவு, பளை, மாங்குளம், முருங்கன் மக்கள் வங்கி கிளைகள் இம்மாதம் 15-ம் தேதி மூடப்படும் என மேலதிகாரிகளால் வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வங்கிகள் உள்ள பகுதிகளில் பொலிஸ் நிலையங்கள் இல்லை என்பதால, இவ்வங்கிகள் மூடப்படுவதாக காரணம் காட்டப்பட்டுள்ளது இவை போதிய காரணமல்ல

''நெல்லியடியில் இலங்கை வங்கி கிளை இயங்கி வருகிறது அதுமூடப்படவில்லை. ஆனால் மக்கள் வங்கி கிளை மூடப்படுகிறது.

''கிளிநொச்சியில் பொலிஸ் நிலையம் இருக்கிறது. ஆனால் அதிகாரிகளால் கொள்ளையை முன்பு தடுக்க முடியாமல் போய்விட்டது. இப்பகுதியில் வாழும் மக்கள் அவசியமானால் அடவு பிடிப்பதை மட்டும் நிறுத்திவிட்டு மற்றும் வங்கி வேலைகளை தொடர்ந்து நடத்தும் மாறு யோசனை தெரிவித்துள்ளனர்

''இதுபற்றி விசாரணை நடத்தி மக்கள் கோரிக்கையை ஏற்று இந்த 5 வங்கிகளையும் மூடாமல் தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் (இ-க)

# காஷ்மீர் தீவிரவாதிமக்பூல்பட் ஒரு சிறந்த தியாகி!

### பாக். அதிபர் ஜெனரல் ஹக் கருத்து

இஸ்லாமாபாத், பெப். 19

இந்திய அரசினால் மரண தண்டனை விதிக்கப்பட்டு கடந்த வாரம் தூக்கிலிடப்பட்ட காஷ்மீர் தீவிரவாதி மக்பூல் பட் ஒரு தியாகி என்று பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக் நேற்று கூறினார்.

காஷ்மீர் தீவிரவாதத் தலைவர் குறித்து பாகிஸ்தான் சார்பில் முதலாவதாக தெரிவிக்கப்பட்ட கருத்து இதுவென்று கூறப்பட்டது பாக் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக்சோவியத் யூனியன் அதிபர் திரு யூரி அந்ரபோவின் மரணச் சடங்குகளில் நேரில் பங்குபற்றுகின்றார் மாஸ்கோ செல்லுமுன்னர் இஸ்லாமாபாத் விமான நிலையத்தில் வழங்கிய பத்திரிகைப் பேட்டியொன்றிலேயே ஜெனரல் ஹக் மேற்கண்டவாறு கூறினார் பாக். அதிபரின் இக்கருத்துக்குறித்து இந்திய தரப்பில் இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதே வேளை ஜம்மு காஷ்மீரில் இந்திரா காங்கிரஸ்கட்சி ஆதரவாளர்கள் மீது காஷ்மீர் மாநில அரசு பாரபட்சம் காட்டுவதாக காஷ்மீர் இந்திரா காங்கிரஸ் கட்சியின் இளைஞர் பேரவைத் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார். ஊர்வலங்கள் மற்றும் கட்சி நடவடிக்கைகளில் பங்குபற்றும் இக்கட்சி ஆதரவாளர்கள் காஷ்மீர் மாநில அரசினால் பாதிக்கப்படுவதாக அவர் மேலும் கூறினார். (கி)

## மாணவர் அனுமதியில் மோசடி!

(கொழும்பு)

இவ்வருடம் கொழும்பு தெற்குப் பிராந்தியத்தில் பாடசாலை அனுமதியில் இடம்பெற்ற மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்துமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சர் திரு ரணில்

[7-ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

ஒருவன் தன்னுடைய தவறுகளை மிகைப்படுத்தியும் பிறருடைய தவறுகளைச் சிறிதாக்கியும் பார்க்கப் பயின்றால் மட்டுமே இரண்டையும் நியாயமாக மதிப்பிடக் கூடுமென்பது என் கொள்கையாகும்.

— மகாத்மாகாந்தி

## நமது நோக்கு

### துப்பாக்கியின் தீவிரம்

விசர்நாய்களின் தொல்லை, விஷப் பாம்புக் கடி போன்ற அபாயங்கள் பற்றி இன்று அதிகம் பேசப்பட்டு வருகிறது.

இவற்றிற்குரிய அதிதீவிர சிகிச்சையும் முன்னேறிவருகிறது; அதேசமயம் இன்னொரு மறைமுகமான உண்மையும் வெளிவரத் தொடங்கிவிட்டது.

பாம்பும் நாயும் நல்ல பிறவிகள்; மனிதன் மத்தியில். — பொதுவாக இந்த நாட்டில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் — இந்த உயிரினங்களுக்கு ஏற்படும் ஆபத்து இவை ஏற்படுத்தும் ஆபத்திலும் பார்க்கக் கூடியதென்பது.

மருத்துவ சேவை அடிப்படையில் நாம் இதனைக் கூறவில்லை, மனிதாபிமான அடிப்படையில் கண்ட உண்மையே இது.

நாயோ பாம்போ கடித்து மனிதன் இறந்தால் 'அது விசர்நாய், அல்லது விஷப் பாம்பு' என்று முடிவு கட்டுகிறோம்; ஆனால் மனிதன் தப்புவானாகில் நிச்சயம் நாயும் பாம்பும் 'குளோஸ்' என்பது எம்மை எவ்வகையிலும் பாதிப்பதில்லை. விஷம் எங்கும் உண்டு; இன்று மனிதனில் அதிகம்.

இதுவே இன்றைய சமூகத்தின் கட்டுப்பாடற்ற நிலைக்கு அடிப்படைக் காரணம். எது? நாகரிக மனிதனில் ஓடும் இரத்தத்தில் விஷம் அதிகரித்து வருவதால் மற்றைய உயிரினங்களுக்கு பெரும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

இன்று எங்கள் நாட்டின் கலாசார முக்கோணத்தைப் பற்றி நன்றாகக் கேட்டுக் காது புளித்த நிலையிலிருக்கின்றோம்.

மிகப்பழமை வாய்ந்த இந்த நாடு இன்று ஜனநாயக ஆட்சியில் ஸ்திரமாக முன்னேறிவருகிறது; இவ்வித ஆட்சிக்கு எவ்வித நெருக்கடியுமில்லை என்று அண்மையில் விஜயம்செய்த அமெரிக்க அரசியல் பிரமுகர்களே ஒப்பாரிசு செய்திருக்கின்றனர்.

நாட்டுமக்களின் சொந்த அபிப்பிராயம் என்ன? இலங்கை வானொலி அரச பத்திரிகைகள் இன்றைய நிலைமை பற்றி — சட்டத்துக்கமைந்த ஆட்சிபற்றி ஒரு நிதானமான தொகுப்புரை வழங்கத் துணிவார்களா? சந்தேகம்.

நாட்டுக்கணிகலம் கலாசார முக்கோணம்; நாட்டுக்கமிகலம் கலாசாரத்தின் முக்கொடுமைகள் — கொ.கொ.க. ஒரு வியாபார ஸ்தாபனத்தின் விளம்பரம் போல் காணப்படுகின்றது? ஆம்—கொலை, கொள்ளை, கற்பழிப்பு.

அரசியல் பயங்கரவாதம் என்று சொல்லப்பட்டு பிரபலப்படுத்தப்பட்ட கொலையும், கொள்ளையும் வடக்கு கிழக்குப்பகுதிகளில் மட்டுமல்ல நாட்டின் எந்தப் பகுதியிலும் அதிகரித்து வருகின்றன.

பட்டப்பகலிலும் நள்ளிரவிலும் துப்பாக்கி ஏந்திய கொள்ளைக் கூட்டம் இந்த நாட்டில் சிவில் ஆட்சி ஸ்தம்பித்த நிலையை பலப்படுத்துகிறது.

கொழும்பு நகரில் 'கப்பம்' செலுத்தி பெருந்தொழில் நடத்தல், கறுப்புச்சந்தை உட்பட பார்த்துவந்த பெரும்புள்ளிகளுக்கு இன்று இந்தக் 'கப்பம் ஆட்சி' துப்பாக்கித் தீவிரத்தில் கொலைக்கும் வழி வகுத்திருக்கிறது.

ஏனைய இடங்களில் — யாழ்ப்பாணத்தில் பிரதானமாக,-வீடுகளில் பொது ஸ்தாபனங்களில் துணிகரக் கொள்ளைக்குத் துணைவன் துப்பாக்கியும் கடத்தப்பட்ட வாகனமுமே!

இன்று விசர்போல் விறுவிறென ஏற்றமடையும் சமுதாயமாற்றம் இக்கொடுமைகளுக்கு இடமளிக்கிறது. திறந்த பொருளாதாரத்தின் விளைவுகளில் ஒன்று, கட்டுப்பாடற்ற சமுதாயம்; போதை கடத்தல், போதைக்கு இளைஞர்பலியாதல், கொள்ளையைத் தூண்டும் பாதுகாப்பற்ற வீடுகள் வங்கிகள், வாழ்க்கை முறைகள் துப்பாக்கி ஆட்சிக்கு ஆதரவளிக்கின்றன

கொள்ளைக்காகக் கொலை, கற்பழித்தலுக்கே துப்பாக்கி! இவ்வித தீங்கு செறிந்த சமுதாயத்தில் வாழும் மனிதர் விஷம் செறிந்த ஜெந்துக்கள்!

சட்டத்தாலும் ஒழுங்காலும் ஒரு தார்மீக சமுதாயத்தைக்கட்டி எழுப்பிவிட முடியாது; ஆனால் மனிதனுக்குக் கெட்ட குணங்கள் எளிதில் படிவது போல, நற்குணங்கள் படியா. இந்தக் கோட்பாட்டுக்கமையவே சட்டமும் நீதிமன்றமும் உருவானவை.

இந்தப் புனிதஸ்தாபனங்களின் மேன்மை இன்று எவ்வாறு சீர்குலைந்திருக்கிறது என்று உணர்ந்தால் இன்றைய ஆட்சியில் தற்பாதுகாப்புக்கு உண்டான அச்சுறுத்தல் இலகுவில் புரியும்.

அரசியல் எவ்வாறாகிலும், ஒருவன் சமூகச்சட்டங்களுக்குச் சிறிதும் பிறழாமல் நடக்க சட்ட ஆட்சி வலுவுடைய வேண்டும்; சட்டத்தைக் காப்பாற்றும் சாதனமே துப்பாக்கி. அநியாயச் சட்டத்தை அல்ல.

துப்பாக்கிக்கு சட்டம் சரணடைவதானால் அராஜகம் வேரூன்றுவதில் என்ன அதிசயம்?

### வீடுகள் சேதம்

(துணுக்காய்)

யோகபுரம் பகுதியில் இவ்வருடம் பெய்த கடும் மழை காரணமாகப் பலவீடுகள் சேதமுற்றன. இதன் காரணமாக யோகபுரம் கிராமசேவை அலுவலர் திரு. கு. ஞானேஸ்வரன் எடுத்த முயற்சியால் முதலாம் கட்டமாக 48 குடும்பத்திற்கும், 2ம் கட்டமாக 61 குடும்பத்திற்கும் அரிசி, மா, சீனி தேயிலை போன்ற உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதியவேந்தர்

## பேராசிரியர் தம்பையா நடராஜா

வேந்தர் தம்பையா நடராஜா பாடசாலைக் கல்வியைக் கொழும்பு றோயல் கல்லூரியில் முடித்தபின் (அவர்கள் குடும்பத்தினர் 1840களிலிருந்து அந்நிறுவனத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்) கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தின் Trinity Hall என்ற கல்லூரிக்குச் சென்றார்கள். அக்கல்லூரி ஏறக்குறைய ஆறரை நூற்றாண்டுகளுக்கு முன்பாகச் சிவில்சட்டம், ஆகமச்சட்டம் ஆகியவற்றைச் சிறப்பாகப் பயிலுவதற்கென்று நிறுவப்பட்டதாகும். கேம்பிறிட்ஜ் சட்ட இறுதிப்பரீட்சையின் இரு பாகங்களிலும் முதலாம் வகுப்பில் அவர்கள் சித்தியடைந்து, ரோமச்சட்டம் ஆங்கிலச்சட்டம் ஆகியவற்றுக்கான பரிசுகளையும் பெற்றுப் பின்னர் லண்டன் சட்டக் கல்வி மன்றத்தின் இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் முதலாம வகுப்புச் சிறப்புச் சான்றிதழையும் பியுக்கனன் பரிசையும் பெற்றார்.

இலங்கைக்குத் திரும்பிவந்ததும் 1943இல் இலங்கைச் சட்டக் கல்லூரியில் விரிவுரையாளராகச் சேர்ந்து தங்கள் ஆசிரியப் பணியை ஆரம்பித்துப் பின்னர் 1947இல் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சட்டத்துறையில் ஒரேயொரு முழுநேர ஆசிரியராகச் சேர்ந்தார்கள். 1951டிலிருந்து அவர்கள் சட்டப் பேராசிரியராகக் கடமையாற்றினார்கள். 1951 தொட்டு 1982 வரை சட்டத்துறைத் தலைவராகவும் (1951இன் பின்னர் சட்டப்பீடாதிபதியாகவும்) பதவி வகித்தார். தொடர்ந்து இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் அதன் பெயர் வாரிசுகளாக அமைந்த இலங்கைப் பல்கலைக் கழகம் கொழும்பு வளாகம், கொழும்புப் பல்கலைக் கழகம் ஆகிய நிறுவனங்களிலும் முப்பத்தாறரை ஆண்டுகள் சேவை புரிந்து, கடந்த டிசம்பர்மாதம் ஓய்வுபெறும் வயது வந்ததும் இளைப்பாறினார். அத்துடன் பல ஆணைக்குழுக்களிலும் அரசாங்கக் குழுக்களிலும் அறிவுத்துறை அமைப்புக்களிலும் அங்கத்துவம் வகித்துள்ளார்.

நாற்பதாண்டுகளுக்கு மேலாக இலங்கைச் சட்டக் கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் சட்ட ஆசிரியராகக் கடமையாற்றியதனால் தங்கள் மாணவர்கள் இன்று சட்ட ஆசிரியர்களாகவும், பேராசிரியர்களாகவும், இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உயர் நீதிமன்ற நீதிபதிகளாகவும், அமைச்சர்களாகவும், சட்டவாக்கசபை அங்கத்தவர்களாகவும், ராஜதந்திரிகளாகவும், தூதர்களாகவும், அரசாங்க சேவையிலும் தனியார் சேவையிலும் அதிகாரிகளாகவும் உத்தியோகத்தர்களாகவும் இருக்கின்றனர். அறிவு பொதிந்த இப்பேரறிஞர் வெளியீடுகள் இலங்கை நீதிமன்றங்களிலும் தென்னாபிரிக்க நீதிமன்றங்களிலும் பிரிவிப்பேரவையின் நீதிக்குழுவிலும், இலங்கை, தென்னாபிரிக்க இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பயன்படுத்தப்படும் தரமான பாடநூல்களிலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன இவ்வெளியீடுகள்மூலமும் சட்டக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அவர் காட்டிவந்த ஆர்வம் மூலமும் இந்நாட்டிலே கல்வித்துறையில் சட்டப் படிப்பின் அந்தஸ்து உயர்த்தப்பட்டுள்ளது. கல்வித்துறைசார் சட்ட அறிஞர்கள் இந்நாட்டில் சட்டத் தொழிலின் ஒரு தனிப்பிரிவினராக அமைய வேண்டியதன் அவசியத்தை அவர் தம் பணிமூலமும் உதாரணம் மூலமும் உறுதியாக நியாயப்படுத்தியுள்ளார் சட்டமானது சீர்திருந்திஅபிவிருத்தியடைவதற்கு உறுதியான அடித்தளமாக அமைவது விஞ்ஞான ரீதியான முறையான சட்ட ஆராய்ச்சியும் சட்டம் பற்றிய வெளியீடுகளும் என்பதைக் காட்டி, அவற்றின் முக்கியத்துவத்தை உணரச் செய்துள்ளார்.

இப்பெருமகன் இந்நாட்டு மக்களுடைய அரசியல், சமூக பண்பாட்டு முன்னேற்றத்துக்கு ... பாராட்டத்தக்க சேவை புரிந்த குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர். இது தொடர்பாக, 1833இல் பிரித்தானியர் தாபித்த முதலாவது சட்டவாக்க சபையில் ஓர் அங்கத்தவராக விளங்கிய இராசவாசல் முதலியார் ஆ. குமாரசுவாமி, அவரது மகன் சேர். முத்துக் குமாரசுவாமி, பேரப்பிள்ளைகள் சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன்னம்பலம் அருணாசலம், கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி, பூட்டப்பிள்ளை சேர் அருணாசலம் மகாதேவா ஆகியோரை மட்டும் குறிப்பிடுவது போதுமானது. சிறப்பாக அவருடைய பேரனார் சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் அவருடைய அறிவுத்துறைச் சாதனைகளையும் நீண்டகாலப்பல்கலைக் கழகத் தொடர்பையும் கண்டு உண்மையில் மகிழ்ந்திருப்பார். ஏனெனில் அன்னார் "இலங்கையில் பல்கலைக்கழகத் திட்டத்தின் தந்தை என உண்மையில் கருதப்படவேண்டியவர்" என 1921இல் அமைக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் முதலாவது அதிபராகிய சேர். றொபற் மாக்ஸ் அவர்களால் வர்ணிக்கப்பட்ட பெரியார்.

இலங்கையில் ஒரு சிறந்த கல்விமானாகவும், பண்பாளராகவும், பேரறிஞர், பல்கலைக்கழக ஆராய்ச்சி நிபுணராகவும் முதிர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புதிய வேந்தர் பேராசிரியர் க. நடராசா அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டமளித்துக் கௌரவித்ததால் தன்னையே கௌரவித்துக்கொண்டது.

## மக்கள் கருத்து

### நோயாளர் ஏமாற்றம்

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள புங்குடுதீவு உபபணிமனை இலவசஆயுள்வேத வைத்தியசாலையில் மருந்துபெற செல்லும் நோயாளர் தொகை கடந்தபல மாதங்களாக வெகுவாக அதிகரித்துவந்துள்ளது. இதனால் மக்களும் தங்கள் பிணி தீர்த்து ஆறுதல் பெற்று வந்தனர். ஆனால் கடந்த சில மாதங்களாக அதே மக்கள் மருந்து இல்லாமையால் அதிருப்தி அடைந்து வெறுங்கையோடு திரும்புகின்றனர்.

தினமும் ஐம்பது நோயாளர்கள் வரை திரும்பும் பரிதாபம் எம்மை வேதனையடையச்செய்கின்றது.

இந்நிலைமை பற்றி அதற்குரிய உத்தியோகஸ்தரிடம் பொதுமக்கள் நேரில் முறைப்பாடுகள் செய்தும் பயன் ஏதும் ஏற்படவில்லை.

த. சிவகுமாரன்
செயலாளர்
சைவ இளைஞர் மன்றம்
புங்குடுதீவு.

★

### நாவாந்துறை சந்தியின் நிலைமை

ஓட்டுமடம், பொம்மைவெளியூடாக கல்லுண்டாய், வட்டுக்கோட்டை செல்லும் றோட்டில் நாவாந்துறையிலுள்ள பகுதி மிகவும் சீர்கேடாகவுள்ளது இப்பகுதியிலுள்ள றோட்டில் பெரும் கிடங்கு ஒன்றுள்ளது. அதில் வெள்ளம் தேங்கி நின்று வாகனங்களின் போக்குவரத்திற்கும், பாதசாரிகள் செல்வதற்கும் இடையூறாகவுள்ளது. நாவாந்துறையிலுள்ள அந்தப்பெரும் கிடங்கிற்குள் வாகனங்கள் செல்லும்போது அதில்விழுந்து, எழும்பியே போகவேண்டியுள்ளது இதனால் வாகனங்களுக்கு சேதம் ஏற்படுவதுடன், அதில் பிரயாணம் செய்பவர்களுக்கும் எந்தநேரத்திலும் ஆபத்து ஏற்படலாம்.

நாவாந்துறைப் பகுதியால் செல்பவர்கள் மூக்கைப்பிடித்துக்கொண்டே செல்லவேண்டியுள்ளது. அங்கு காணப்படும் குப்பை, கூளங்களும் இறந்த மிருகங்களின் உடல்களும் அப்பகுதியையே அசிங்கப்படுத்துகின்றன.

இவைதொடர்பாகபலமுறை பத்திரிகைகள் இதுபற்றிகுறிப்பிட்டும்கூட யாழ். மாநகரசபை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நாவாந்துறைப் பகுதி வீதிப் பராமரிப்புயாழ் மாநகரசபைக்குக்கீழ் வராவிட்டால் அது தொடர்பாக பெருந்தெருக்கள் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமா?

வி. பாக்கியநாதன்,
வட்டுக்கோட்டை,

### பூங்கா விருந்தில் அதிபரின் வெள்ளி விழா

இன்று மாலை யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் மாபெரும் பூங்கா விருந்தொன்றை நடாத்தித் தங்கள் அதிபர் அருட்திரு ஜி. ஏ. பிரான்சிஸ் யோசப் அவர்களின் குருத்துவ வெள்ளி விழாவினிலே குதூகலிக்கவுள்ளனர்.

அதிபர் பிரான்சீஸ் யோசப் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட காலம்முதல் கடந்தகால் நூற்றாண்டையும் பத்திரிசியத்தின் எழுச்சிக்காகவே செலவிட்டார். ஆசிரியராக இசை நடனக்கலை பயிற்சியாளராக விளையாட்டு ஆலோசகராகப் பற்பலவடிவங்களில் தன் ஆரம்பப்பணியை ஆரம்பித்த அருட்திரு. யோசப் பிரான்சிஸ் அடிகள் மத்தியபிரிவுப் பொறுப்பாளராகி இறுதியில் அதிபராக உயர்வுபெற்றார்.

எந்நேரமும் காலத்திற்கேற்ற மாற்றங்களை ஊக்கப்படுத்தி வழிகாட்டும் அதிபர் தமது பதவிக்காலத்தில் பல்வகைபுதுமையான கல்வியியல் மாற்றங்களைக் கல்லூரியில் புகுத்தி கல்வியினை மட்டுமல்ல கல்லூரி நிர்வாகத்தையும்கூட ஜனநாயகப்படுத்தினார்.

அண்மையில் இவர் "ஈழநாடு" வெள்ளிவிழா மலரில் எழுதிய "மாற்றங்களின் சவால்" எனும் கட்டுரை அவரின் கல்வியியல் சிந்தனையைப் புரியவைக்கக்கூடிய ஒன்று.

அதிபர் அவர்கள் யாழ். நூலக புனருத்தாரண சபைத் தலைவராக இருந்து ஆற்றிய அரும்பணியை நாடறியும் இவ்வாறாக அவர் கல்லூரிக்கு மட்டுமல்ல முழுத்தமிழ் உலகிற்குமே பெரும்பணியாற்றும் பேராளர் அன்னாரின் வெள்ளி விழாவில் மகிழும் மாணவராகிய நாம் அவருக்கு இறையருளிட்டி பல்லாண்டு வாழ வாழ்த்தி நிற்கிறோம்.

—ம. [illegible]வின்சாந்தன்

# ஆங்கிலத்தின் அவசியத்தை மாணவர் உணரவேண்டும்"

## கொக்குவில் இந்து பரிசளிப்பு விழாவில் கருத்து

(யாழ்ப்பாணம்)

"ஆங்கில மொழி சர்வதேச மொழி என்ற அந்தஸ்தை உலக அரங்கில் பெற்றுள்ளது. அறிவியல் வளர்ச்சி அவற்றின் பலாபலனை புதிய கண்டு பிடிப்புகள் என்பன ஆங்கில மொழியூடாக உலகிற்குப் பரவின. இவற்றைப் பெற்றுப் பலன் அடையவேண்டிய நிலை எமது நாட்டைப் பொறுத்த வரை தவிர்க்கமுடியாததே"

இவ்வாறு கொக்குவில் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய சட்டத்தரணி க. சிவானந்தம் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் செல்வி ச. ஹம்சலா வரவேற்புரை நிகழ்த்தினார். சட்டத்தரணி சிவானந்தம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

"நான் இன்று இக்கல்லூரியின் மூன்றும் மாடிக் கட்டிடத்தில் நின்று பேசும்போது கொக்குவில் இந்துக் கல்லூரியுன் சிறிய ஓலைக் கொட்டில்களில் கல்விகற்ற நாட்களை எண்ணிப்பார்க்கிறேன். இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களித்த திரு ஹண்டிப் பேரின்பநாயகம் திரு சி. கே. கந்தசாமி அவர்களையும் பெருமையுடன் நினைவுகூருகிறேன். இவர்களுடன் அன்று எங்களுக்குக் கல்விபுகட்டிய ஆசிரியர்களையும், அவர்கள் எங்கள் முன்னேற்றத்திற்காக அளித்த தன்னலமற்ற சேவையையும் மறக்கமுடியவில்லை.

"ஆசிரியர்களின் சேவைக்கு மதிப்புக்கொடுத்தால் தான் மாணவர்களாகிய நீங்கள் உயர்நிலையை அடையமுடியும். அவர்கள் உங்கள் முன்னேற்றத்தில் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதை பின்னர்தான் உணர முடியும்.

"தற்கால நவீன அறிவியல் விருத்தி மிகவேமாக வளருகின்றது. இதற்கு ஈடுகொடுக்கும்வகையில் கல்வி வளர்ச்சி துரிதமாக்கப்பட்டுள்ளது. நவீன அறிவியல், கல்வி விருத்தி நூல்கள் உலகளாவிய நிலையில் ஆங்கில மொழியில்தான் உடனுக்குடன் வெளிவருகின்றன எனவே ஆங்கிலமொழி அறிவு மிகமுக்கியமானது என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். மாணவர்களாகிய நீங்கள் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கற்றால், உலகின் எப்பாகத்திலும் வேலைவாய்ப்புகளைப் பெற்று வாழலாம்; உங்கள் வாழ்க்கையும் மேலோங்கும்."

கல்லூரி அதிபர் திரு. பஞ்சலிங்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:-

### பெற்றோர் கவனத்திற்கு

"மாணவர்களின் முன்னேற்றத்தில் பெற்றோரின் பங்கு மிகமுக்கியமானதொன்றாகும். மாணவர்கள் தம் கல்விப்பராயத்தில் முக்கால் பங்கு காலத்தைத் தம் பெற்றோருடன்தான் கழிக்கின்றார்கள் என்பதை நாம் நினைவிற்கொள்ளவேண்டும். அவர்களின் மனோநிலை, ஒழுங்குமுறை முதலியனவற்றின் உருவாக்கலில் பெற்றோர்களுக்கும் பெரும் பங்குண்டு என்பதனைப் பெற்றோர்களாகிய நீங்களும் உணர்தல் அவசியம்.

"பெற்றோர் பிள்ளைகளை வழிநடத்திச்செல்லவேண்டும். ஆனால் பிள்ளைகளே பெற்றோரை வழிநடத்திச் செல்வதாகத் தெரிகின்றது. இது ஒரு கசப்பான உண்மையாகஇருக்கலாம். ஆனால் இந்நிலையே எனது அனுபவத்தில் நான் உணர்ந்து கொண்டதாகும். பிள்ளைகள் கல்லூரிக்கு வராத போது மறுநாள் பொய்க்காரணம் காட்டி கடிதம் கொண்டு வருகிறார்கள். இதை நாம் தீரவிசாரிக்குமிடத்து பெற்றோர் பிள்ளைகளுக்காக வாதாடுகின்றனர். வீவு பெறாது கல்லூரிக்குப் பிள்ளைகள் வராத போதும் கூடப் பெற்றோர்கள் அறியாமையினால் அவர்கள் பக்கமே பேசுவதையும் நாம் காண்கின்றோம். இவை மட்டுமல்ல பெற்றோர் தமது பிள்ளைகள் விடயத்தில் அதிபரையும், ஆசிரியர்களையும் சந்திப்பதில் தயக்கம் காட்டுகிறார்கள். இந்நிலை மாறவேண்டும். ஏனெனில் மாணவர்கள் இடையே விரக்தியும், அமைதியின்மையும் இக்காலகட்டத்தில் காணப்படுகின்றன. இக்காலகட்டத்தில் பாடசாலைகளும் பெற்றோரும் ஒன்றுசேர்ந்து மாணவர்களின் நலன் கருதிச் செயலாற்றுதல் அவசியமாகின்றது.

பெற்றோர்களாகிய நீங்கள் கல்லூரி வழங்கும் சந்தர்ப்பங்களை ஆசிரியர்களுடன் சேர்ந்து நல்லமுறையிலே பயன்படுத்தி மாணவ சமுதாயம் சகலதுறைகளிலும் முன்னேற்றமடைய முன்னின்று உங்கள் ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்"

திருமதி ஜெகதீஸ்வரி சிவானந்தம் பரிசில்கள் வழங்கினார் கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு வி. எஸ் சிவபாலசிங்கம் நன்றி தெரிவித்துப்பேசினார். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (மா)

## ஆச்சிரமம் திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பளை - மடத்தடி ஒழுங்கையில் உள்ள ஆயர்பாலு சோதிட நிலையத்தில் "ஆயர்பாடி ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமம்" திறப்புவிழா இம்மாதம் 17-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஹரே கிருஷ்ண ஹரேராம இயக்கத்தைச் சேர்ந்த தவத்திரு மகாசுர்த்தா தாஸ் சுவாமிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். [ப]


## கைதிகள் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலைக்குள் கைதிகளுக்கிடையே ஏற்பட்ட சச்சரவு சுமுகமானமுறையில் தீர்க்கப்பட்டுள்ளதாக, சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கும், சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த கைதிகளுக்குமிடையே நேற்று சிறுசச்சரவு ஏற்பட்டதாகவும், இதனைத்தொடர்ந்து கைகலப்பு நிகழ்ந்தபோதிலும் எவருக்கும்காயம் ஏற்படவில்லை என்றும், அப்பொழுது பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் 'விசில்' ஊதி சகல உத்தியோகத்தர்களையும் அழைத்து சுமுகமாகத் தீர்த்துவிட்டதாகவும் அந்த உத்தியோகத்தர் தெரிவித்தார். (மா)

## லூர்த்து மாதா சித்திரத் தேர்



மாதகல் புனித லூர்த்துமாதா கோயிலுக்காக அமைக்கப்பட்டுள்ள சித்திரத்தேரின் படம் இது. இம்மாதம் 18-ந் திகதி நடைபெறும் திருவிழாவின் போது லூர்த்து அன்னை இப்புதிய சித்திரத் தேரில் பவனி வருவார்.

## ஜனாதிபதி ஜெயவர்த்தன ஜூனில் அமெரிக்கா விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் விடுத்துள்ள அழைப்பை ஏற்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் அமெரிக்கா செல்லவுள்ளார்.

இவர் அங்கு நான்குதினங்(8-ம் பக்கம் பார்க்க)

(8-ம் பக்கம் பார்க்க)

## கடைஆட்சியை குழப்பக்கூடாதென்று யாழ். மாநகரசபை ஆணையாளர் மீது மாவட்ட நீதிமன்றம் கட்டளை!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான பெரியகடை கஸ்தூரியார் சத்திரப் பகுதியில் அமைந்துள்ள 60-ம் இலக்க கடைக் கட்டிடத்தில், வழக்காளிகளின் ஆட்சியை குழப்பவோ இடையூறு செய்யவோ கூடாதென யாழ். மாநகர சபைக்கும், யாழ். மாநகர சபை ஆணையாளர் கே. சிவஞானத்திற்கும் யாழ் மாவட்ட நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

வழக்காளிகளின் விண்ணப்பம் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சுந்தரலிங்கம் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்விண்ணப்பத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லையா கந்தசாமி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை சர்வானந்தன், புங்குடுதீவைச் சேர்ந்த இராமலிங்கம் சுப்பிரமணியம், ஆகியோர் சட்டத்தரணி மூலம் தாக்கல்செய்தனர். விண்ணப்பத்தில் (1) யாழ். மாநகர சபை, (2) யாழ். மாநகர சபை ஆணையாளர் கே. சிவஞானம், ஆகியோர் எதிராளிகளாக காட்டப்பட்டுள்ளனர்.

வழக்காளிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம், சட்டத்தரணி என்.பத்மநாதன் உதவியுடனும்சட்டத்தரணி செல்வி. என். அபிமன்னசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

இவ்விண்ணப்பத்தில் கஸ்தூரியார் சத்திரப் பகுதி 60ம் இலக்க கடைக்கட்டிடத்தில் வழக்காளிகளின் ஆட்சியை குழப்பவோ அல்லது வேறு எவ்வகையிலும் இடையூறு செய்யவோ, கூடாதென்றும் வழக்காளிகள் கடையை பழுதுபார்ப்பதை தடைசெய்யக் கூடாதென்றும் எதிராளிகள், பணியாட்கள், தங்குனர்கள், பிரதிநிதிகளுக்கு நிரந்தர தடைக்கட்டளையையும், இடைக்காலத் தடையுத்தரவையும் பிறப்பிக்க வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

வழக்காளிகளின் பிரதானசத்தியக்கூற்று ஆவணங்கள் சட்டத்தரணியின் சமர்ப்பணங்களை பரிசீலனைசெய்தபின் நீதிமன்றம்பின்வருமாறு கட்டளை பிறப்பித்துள்ளது.

வழக்காளிகளின் இடைக்கால தடைக்கட்டளை விண்ணப்பத்தில் விசாரணை முடிவடையும்வரை, எதிராளிகள் அவர்களின் பணியாட்கள், பிரதிநிதிகள், தங்குனர்கள், கஸ்தூரியார் சத்திரப் பகுதி 60ம் இலக்க கடைக்கட்டிடத்திலும் அவ்வாதனத்திலும் வழக்காளியின் ஆட்சியை குழப்பவோ அல்லது வேறு எவ்வகையிலும், இடையூறு செய்யவோ கூடாதெனவும் வழக்காளிகள் தற்பாதுகாப்பிற்காக கடையை பழுதுபார்ப்பதை தடைசெய்யக் கூடாதெனவும் கட்டளைபிறப்பிக்கப்படுகிறது. இக் கட்டளையை எதிராளிகள் மதியாது மீறிநடந்தால் இந் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டிற்கு தண்டிக்கப்படுவார்களென எச்சரிக்கை செய்யப்படுகிறீர்கள். (க)


DIPLOMA IN MANAGEMENT

(ENGLISH and TAMIL)

(முகாமைக் கற்கைநெறி)

க. பொ. த. (சாதாரணம்) மூன்று திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி

அல்லது

க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முகாமை, கணக்காய்வு, வரிக்கணிப்பீடு ஆகிய துறைகளில் பூரண பயிற்சியளிக்கப்படும்.

பயிற்சிநெறி முடிவடைந்ததும் சுயமாக நிறுவனங்களில் வருமானவரிகணக்கு எழுதும் ஆற்றலைப் பெறுவீர்கள்.

விபரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு

பணிப்பாளர்,

தொழிற் கல்விச் சேவைகள் பிரிவு,

பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## வவனியா மாவட்டத்தில் பெருந்தொகை உழுந்துச்செய்கை முற்றாகப் பாதிப்பு!

(வவனியா)

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக வவனியா மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கர் உழுந்துச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது!

அதேநேரத்தில் அறுவடை செய்யக்கூடிய 1,500 ஏக்கர் நெல் வேளாண்மையுடனும் 1,000 ஏக்கர் இளம் நெற்பயிர்களும் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது ஒரு ஏக்கர் உழுந்துச்செய்கையிலிருந்து 100 கிலோ தரமான விதைகளைப்பெற முடியாது இருப்பதாக விவசாயிகள் [illegible] வவனியாப் பகுதியில் [illegible] கள் பாதிப்பு பற்றி ஆராய்வதற்கு விவசாய அமைச்சைச் சேர்ந்த குழு ஒன்று வவனியா மாவட்டத்துக்கு விஜயம் செய்து விபரங்களைத் தெரிந்து கொண்டது.

வவனியா கச்சேரியில் நடந்த ஆய்வரங்கில் வவனியா அரச அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன், விவசாய உதவிப்பணிப்பாளர் திரு எஸ். ரி. பத்மநாதன், நீர்ப்பாசன உதவிப்பணிப்பாளர் திரு எஸ். துரைராஜரத்னம், உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## மகனுக்காகத் தந்தை ஆஜராகி வாதாடினுர்

(மாவிட்டபுரம்)

மகனுக்காக தந்தை ஆஜராகிவாதாடிய சம்பவம் ஒன்று மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

சுன்னுகம் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போக்குவரத்து விதிகளைமீறியதற்கான வழக்கு ஒன்றிலேயே இது நடந்தது.

காங்கேசன் துறையைச் சேர்ந்த டேவிட் செல்வரத்தினம் என்னும் கல்லூரி மாணவன் மோட்டார் சைக்கிளை ஹெல்மட், வரிப்பத்திரம் காப்புறுதிப்பத்திரம், சாரதி லைசென்ஸ் என்பன இல்லாமல் ஓடிச்சென்ற சமயம் தாம் கைதுசெய்ததாக சுன்னுகம் பொலிஸ் சார்ஜண்ட் பரமநாதன் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

பொலிஸ்தரப்பில் சார்ஜண்ட் பரமநாதன் சாட்சியாக அழைக்கப்பட்ட சமயம் மேற்படி கல்லூரி மாணவனின் தந்தையாகிய சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் அவருக்காக ஆஜராகி சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

அச்சமயம் சாட்சி முரண்பாடான முறையில் சாட்சிய மளித்தமையால் நீதிபதி திரு. வி. சிதம்பரநாதன் அவரை எச்சரிக்கை செய்தார்.

சம்பவதினம் குறித்த மோட்டார்சைக்கிளை மேற்படி கல்லூரி மாணவன் ஓட்டிச்செல்லவில்லையெனவும், அவர் மோட்டார் சைக்கிளின் பின்புறம் இருந்தே பிரயாணம் செய்ததாகவும் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் வாதிட்டார்.

இறுதியில் சுன்னுகம் பொலிசார் மேற்படி கல்லூரி மாணவன் மீதான 4 குற்றச்சாட்டுக்களில் 3 குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

ஹெல்மட் இன்றிமோட்டார் சைக்கிளில் சென்றதற்காக நீதிபதி திரு. வி. சிதம்பரநாதன் 10 ரூபா அபராதம் விதித்தார்.

## மன்னுருக்கு ரூ. 50 ஆயிரம் நூல்கள்

(மன்னர்)

மன்னர் பொது நூல்நிலையத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதியை மன்னர் மாவட்ட அபிவிருத்திச்சபை ஒதுக்கீடு செய்திருந்தது.

## இன்றைய பலன்

மாசி மாதம் 3-ம் திகதி
(15—2—84)
புதன்கிழமை

மேடம்: எதிர்காலம் பிரகாசமடைய இன்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். தொழில் துறையில் மனதுக்கேற்ற வண்ணம் இடமாற்றங்கள் ஏற்படும். முன்னுள் மேலதிகாரி யொருவர் உங்கள் வெற்றிக்கு துணைநிற்பார்.

இடபம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாக கிடைக்கும் உறவினர் ஒருவருக்கு உதவிசெய்யநேரிடலாம். உடல் நலத்திலும் முன்னேற்றம் காணப்படும். நல்ல தினம்.

மிதுனம்; குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் இடையே தென்படும். உங்களைப்பற்றி புனைந்துரைகள் பரப்புவதற்கு சிலர் முனைவர். அதிக பேச்சு ஆபத்திற்கு இடமளிக்கும் அடக்கம் நன்று.

கடகம்: இளைபந்தங்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும். மனக்குமைச்சலினுல் வேதனைப்படுவீர்கள். சிறிய விஷயத்திற்கு இடமுண்டு. பிள்ளை ஒன்றின் உடல்நலம் வேதனையைத் தரலாம். தெய்வநம்பிக்கை வேண்டும்.

சிங்கம்: பேச்சு வன்மையினுல் பெரும்புகழ்கிடைக்கும் பெரிய இடத்துச் சகவாசம் செல்வாக்கைத் தேடித்தரும் வரவிலும் உயர்வுகாணும், சகலருக்கு அதிஷ்டவாய்ப்புகளும் கிடைக்கலாம்.

கன்னி: எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. விஷமிகளின் புனைந்துரைகள் வேதனையைத் தரலாம். பொறுமையே மேல் என்று இருப்பின் நன்று.

துலாம்: கனிவான நிலைவகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள். கல்வித்துறையில் வித்துவத் தன்மை தென்படும். வாகனக்காரர்கள் நன்மதிப்பை பெறுவர் சுபதினம்.

விருட்சிகம்: வருமானத்தில் திருப்திகரமான நிலை தென்படும் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள் புத்திரவழியால் புதினமும் கிடைக்கும். புதுமையான எண்ணங்களும் உருவாகலாம்.

தனுசு; ஆமைவேகத்தில் காரியங்கள் நடைபெறும். பகைவர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும். காணித் தொல்லையும் கடன்படவும் நேரிடலாம். குடும்பத்தில் இடைக்கால பிரிவுமுண்டு

மகரம்: வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள். குடும்பத்தில் குதூகலமான சம்பவம் இடம்பெறும் சுபதினம்.

கும்பம்: வாழ்க்கை ஒரு சுமையாக தோன்றக்கூடும். கடன்தொல்லைகள் அதிகரிக்கக் கூடும். நண்பர் ஒருவர் காலை வாரிவிடக்கூடும். சிந்தனையை ஒருவழிப்படுத்தி செயல்படவும்.


மீனம்: உங்கள் நடவடிக்கைகளில் தனிச் சிறப்புதென்படும். சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு. பெரியவர் ஒருவர் உங்களுக்கு கைகொடுத்து உதவுவார் பிரசவழி பெருமையும் உண்டு. நல்லதான்.

சோதிடக் கலாநிதி
திருமலை ஜூனியர்
க. வேலுப்பிள்ளை

## உணவுப் பொருள் விநியோகம்

(துணுக்காய்)

ஜூலைக் கலவரம் காரணமாக யோகபுரம் பகுதியில் வந்து குடியமர்ந்தோருக்கான 12-ம் கட்ட உணவுப்பொருள் விநியோகம் நடைபெற்றது.

அங்கும்... இங்கும்... எங்கும்...



சிங்கர்

சவாரிக்குச் சிறந்ததோர் பைசிக்கிள் சிங்கர்

உங்கள் பிரயாணம் எதுவாக இருந்தாலும் உற்ற வொரு நண்பன்.
நீடித்த பாவனையும் தரமும் கொண்ட சிங்கர் பைசிக்கிள்.

கரடு முரடான பாதையா கல்லும் குழியும் நிறைந்த தெருவா,
சதுப்பு நிலமா, வைரமே உருவான வீதியா உறுதியான
உதிரிப்பாகங்கள் கொண்ட சிங்கர் பைசிக்கிள் ஒய்யாரமாகவே ஓடும்.

விலை ரூபா - 1,490/- (வரிகள் தனி)

* சிங்கர் இலகு தவணைக் கட்டணமுறை, வாங்குவதற்கு ஒரு சிறந்த வழி.

SINGER BICYCLES

சிங்கர் (ஸ்ரீ லங்கா) லிமிட்டெட்.

* Registered Trade Mark of the SINGER Company

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00 தங்கவேலு
சபாஷ் மீனு

ஹரன் (யாழ். நகர்)
இரண்டாவது
குதூகல வாரம்!
திருலோகசந்தரின்
சிவாஜி, ஸ்ரீப்பிரியா
வசந்தத்தில் ஓர்நாள்
(ஈஸ்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
Michael Caine,
Omar Sharif, Kabir Bedi
ASHANTI
Action — Scope — Color

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2-30, 6-00
ஏ. வி. எம். ராஜன்
சுந்தராம்பாள்
துணை

15-2-84 வரை
மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நம்பியார் - நாகேஷ்
மீனவ நண்பன்
(கலர்)

7 "சூப்பர் ஹிட்"
பாடல்களுடன் மக்களை
மனங்கவர்ந்த வண்ண
காதலோவியம்.
றீகல் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
கோகன்... பூர்ணிமா
பயணங்கள்
முடிவதில்லை

சில தினங்கள் மட்டும்
ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். — லதா
சிரித்து
வாழவேண்டும்
(கலர் - புதிய பிரதி)
அடுத்த வெளியீடு
டிக் டிக் டிக்

இன்று மட்டும்
வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார் - ராதா
வெச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்
17 — 19 வரை
மயங்குகிறள்
ஒரு மாது

லிடோ (யாழ்நகர்)
Daily 10-30, 2-15, 4-45
7-15, 9-30
Swamp Thing
(Action film)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15,
4-45, 7-15, 9-15
VICTORY AT ENTEBBE
(கலர்)
(Action packedthrill-Film)
இடிஅமினின் உகண்டா
நாட்டில் என்டபீ விமான
நிலையத்தில் ஏற்பட்ட திகி
லூட்டும் உண்மைச் சம்ப
வத்தை நேரில் கண்டுக
ளிக்க அரிய வாய்ப்பு!


## மாணவர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்காவைக் கேட்டுள்ளது.

கொழும்பு தெற்கு கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகளும் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. எச். என். பெர்னாண்டோ கல்வியமைச்சருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.


ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
இந்தியாவில் முதல்முறை
திரையிட்டபொழுது
தடைசெய்யப்பட்டு மீண்
டும் திரையிட்ட பொழுது
175 நாட்களுக்கு மேல் ஓடி
வசூலில் சாதனை நிலைநாட்
டிய படம்.



கமல் — ஸ்ரீதேவி — தீபா
மீண்டும் கோகிலா
(ஈஸ்மன் கலர்)
இசைகளின்
இன்பக் காவியம்


## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல/மரணசாதன நியாயாதிக்கம்.
T/187

வசாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிராசா செல்லத்துரை மறுநாமம் வஸ்தியாம்பிள்ளை பிலிப்புப்பிள்ளை என்பவரின் மரணசாதன சொத்துப்பற்றிய விடயம்.

காலஞ்சென்றவர்.

பிலிப்புப்பிள்ளை யேசுதாசன் சந்தகிட்டி வளவு வசாவிளான்.

மனுதாரர்.

மேற்குறித்த காலஞ்சென்றவரின் மரணசாதனத்தை நிருபிப்பதற்காக மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளதென்றும், அதற்கிணங்க முதலிலே ஆக்கப்படும் முற்றுனகட்டளை 1984-ம் ஆண்டு மாசி மாதம் 2-ம் திகதி இந்நீதிமன்றத்தில் பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1984-ம் ஆண்டு மாசி மாதம் 8-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
சுப்பிரமணியம் வேலாயுதம்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

வரைந்தவர்
சொ. தியாகேந்திரன்,
மனுதாரின் சட்டத்தரணி.
788

## பட்டுநூல் உடை உற்பத்திக்கு பாராட்டு

மட்டுவில் பட்டுநூல் உடைகள் உற்பத்தியை, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா நேரில் பார்வையிட்டுப்பாராட்டுத் தெரிவித்தனர்.

இவருடன் திட்டமிடல் அதிகாரி திரு கே. சிவதாசனும், இந்திய பட்டுநூல் உற்பத்தி நிபுணர் திரு. குமார் சங்கரும் வந்திருந்தனர்.

மட்டுவிலில் திரு தர்மலிங்கம் தயாரித்திருந்த பட்டு உடைகளைப் இவர்கள்பார்வையிட்டனர்.

இந்திய பட்டுநூல் நிபுணர் திரு குமார் சங்கர் மேலும் பலகோணங்களிலான தொழில் நுட்பங்களைக் கற்பித்து, பட்டு நூல் உற்பத்திக்கு ஊக்கமளித்துச் சென்றுர். (ச)

## யாழ். இந்து

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

சேவை நலம் பாராட்டிப் பேசினர்கள்.

திரு. குமாரசாமிதொடர்ந்து உரையாற்றும்போது யாழ். இந்துக்கல்லூரி தனக்கென தனியான நெறிமுறைகளைக் கொண்டது அதன் வளர்ச்சி இடையீடின்றித் தொடரும். கல்லூரி வளவில் அமைந்திருக்கும் அருள்மிகு ஞானவைரவ சுவாமியின் திருவருளே கல்லூரியின் சாதனைகளுக்குக் காரணம். தொன்மைவாய்ந்த இத்தெய்வத்துக்கு இந்துப்பண்பாட்டு அடிப்படையில் ஆலயம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது, இக்கோயில் அமைப்புவேலையை பொறுப்பேற்று நடத்தி முடித்துக்குடமுழுக்குச் செய்து தெய்வீக ஒளிவீசச்செய்வது கல்லூரி மாணவர்கடமை. இப்பணியை நான் அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறேன். அவர்கள் அதனை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இரண்டாவது பணி கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் நிலையான நிதியம் ஒன்றைஅமைத்தல் இதனைஏற்றுச் செயற்படுத்தும் பொறுப்பு கல்லூரி பழைய மாணவர்களைச் சார்ந்தது. இதற்கான பூர்வாங்க வேலைகள் முடிவுற்ற நிலையில் நான் அதிபர்பொறுப்பிலிருந்து ஓய்வுபெறுகிறேன். 1975முதல் இதனை உருவாக்கும் முயற்சியில் நான் ஈடுபட்டிருந்தாலும் பூரண வெற்றிபெற முடியவில்லை. இப்போது முடிவு பெற்றுள்ள பூர்வாங்க வேலைகளைத் தொடர்ந்து செய்து வெற்றிகாணப் பழைய மாணவர் அனைவரும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும். இப்பணியைப் பழைய மாணவர்களிடம் நான் ஒப்படைக்கிறேன்.'' என்றுர்.

## முதலாண்டு நினைவஞ்சலி



அ. மரியநாயகம்
இளைப்பாறிய
S.L.D O.

மலர்வு: 5-8-1921

உதிர்வு: 15-2-1983

உங்கள் நினைவு என்றும் எம் அனைவர் உள்ளத்திலும் அணையாத தீபமாய் பிரகாசிக்கின்றது உங்கள் மாசற்ற ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

மனைவி, மகள்,
மருமகன், சகோதரர்

சுமித்ரோவில்,
இறைம்பைக்குளம்.
814

## ஓராம் ஆண்டு நினைவு அஞ்சலி

லலிதாதேவி பேராயிரம்பிள்ளை

(முன்னுள் ஆசிரியை, மானி-மகளிர் கல்லூரி)




தோற்றம்: 17-08-1933
மறைவு: 15 02-1983

நாம் நித்தம் நின் நினைவால் [illegible]
புத்தம் புதும[illegible]
தவே வா[illegible]ய்
வானுலகில்[illegible]

கண[illegible]கள்,
[illegible]ர்,
[illegible]ளார்.
[illegible]தி,
[illegible]ப்.

(802)


உங்கள்
தங்க நகைகளுக்குப்
பணம் தேவையா?



42 வருடகால
சேவை

TFC

த பினன்ஸ் கொம்பனி லிமிரெட்
249, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



கனகரத்தினம் துரைசிங்கம் (துரை)

(விலைமதிப்பு திணைக்களம்)

உதயம்: 23-2-1934 உதிர்வு: 15-2-1983

சிரித்த முகம், சிறந்த பண்பாளன்
எவர்க்கும் உதவும் மனப்பாங்கு
நிசவாழ்வில் அவரை மிகவும் நேசித்தோம்
சாவிலே மறக்க முடியுமா?

விலைமதிப்பு திணைக்கள ஊழியர்கள்.

விலைமதிப்பு திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
(801)

# இரகசியபொலிசார் எனக்கூறி பணம், நகைகள் கொள்ளை!

(வவனியா)

இரகசியப் பொலிசார் எனத் தம்மை அறிமுகப்படுத்தி வீடு சோதனை செய்யப்போவதாகக் கூறி துப்பாக்கி சகிதம் மேல் நாட்டு உடைப்பாணியில் வந்தவர்கள் வீட்டிலிருந்த நகைகள், ரொக்கப்பணத்தை தக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

பரந்தன் கண்டி வீதியில் கோணக்கண்டு என்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

வீடு சோதனை செய்ய வந்த ஒருவரிடம் துப்பாக்கி இருந்ததாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12,500 ரூபா பெறுமதியான ரொக்கப்பணம், நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிசில் க. வேலுப்பிள்ளை என்பவர் புகார் செய்துள்ளனர்.

கிளிநொச்சிப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வெ)

## இளைஞன் சுட்டுக்கொலை! நெடுங்கேணியில் சம்பவம்

[வவனியா]

நெடுங்கேணி அரியா குண்டான் பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

மற்ற ஒருவருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளது.

சரத்குமார என்ற 15 வயதுடைய இளைஞனே சுடப்பட்டு மரணமானான். சரத்குமார என்பவர் படுகாயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி பொலிஸ் விசாரணையின்போது தெரியவருவதாவது: பலியானவரும், காயமுற்றவரும் தமது சேனையில் இருந்தவேளையில் நெடுங்கேணி கனகராயன்குளம் சேர்ந்த வல்லிபுரம் என்பவர் இனம் தெரியாத இருவருடன் சேனை குடிசைக்கு வந்து குடிசையிலிருந்த இறந்தவரிடமும், காயமுற்றவரிடமும் துப்பாக்கி தரும்படி கேட்டாராம். அவர்கள் தம்மிடம் துப்பாக்கி இல்லையென கூறினார்களாம் பின்னர் குடிசையிலிருந்தவர்களை தாக்கிவிட்டு, இழுத்துச் சென்று பக்கத்துக் காட்டில் வைத்து சுடப்பட்டதாக தெரியவருகிறது.

சேனைக்கு வந்தவர்கள் துப்பாக்கி கொண்டுவந்தார்கள் என விசாரணையின்போது தெரியவந்தது.

ஒட்டுசுட்டான் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்தேகநபர்

## அடையாளம் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கப்பம் வாங்கியதாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து நடந்த அடையாள அணி வகுப்பில் சந்தேக நபர் அடையாளம் காணப்படவில்லை.

யாழ். நீதிமன்றத்தில் பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில், நேற்றுப் பிற்பகல் அடையாள அணி வகுப்பு நடைபெற்றது.

சந்தேக நபரான அன்வர், அடையாள அணிவகுப்பில் இடம் பெற்றார். சாட்சிகளான மகி, டாக்சி சாரதி குணசிங்கம், ஐ. எம். இமாம் ஆகியோர், சந்தேகநபரை அடையாளம் காட்டவில்லை.

அடையாள அணிவகுப்பின் போது சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை.

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப். இன்ஸ்பெக்டர் எஸ். முத்துத்தம்பி, அடையாள அணிவகுப்புக்கான ஏற்பாட்டை செய்தார்.

அடையாள அணிவகுப்பின் பின்னர் சந்தேக நபர் யாழ். நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஆர். ராஜகாரியர் ஆஜரானார்.

நீதவான் சந்தேக நபரை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து அடுத்தமாதம் 3-ம் திகதி ஆஜராகுமாறு உத்தரவிட்டிருந்தார்.

இவ்வழக்கு தொடர்பாக ஏற்கனவே, நடந்த அடையாள அணிவகுப்பில் மற்றும் இரு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படவில்லை. (க)


## மரண அறிவித்தல்

### கந்தப்பர் சிற்றம்பலம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

காரைநகர் கந்தப்பர் சிற்றம்பலம் இளைப்பாறிய ஆசிரியர் காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் ஞானப்பிரகாசத்தின் அன்புச் சகோதரரும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஞானம்பிகை, புனிதவதி, மங்கையற்கரசி, திருஞானசம்பந்தன், சோமாஸ்கந்தன், பிரமராம்பாள், சச்சிதானந்தன், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புத் தந்தையும் பரஞ்சோதி, ஜெகதீசன், தவலிங்கம், நிர்மலாதேவி, ஜெயதீஸ்வரி, மார்க்கண்டு ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். இறுதிச் சடங்குகள் 15-02-84 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும்.

உற்றார் உறவினர் நண்பர்களும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 826

## மரண அறிவித்தல்

### பண்டிதை பாலாம்பிகை தனபாலசிங்கம்

பண்டிதை பாலாம்பிகை தனபாலசிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய மாவட்ட நீதிபதி செ. தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், திரு த. ஜெயதேவன் (கொழும்பு), Dr. உபேந்திரன் (புறூனே), திருமதி அனுசூயா, விமலாதேவி, திருமதி வித்தியாவதி, திரு ஜெகதீசன் அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற S. வாமதேவன், திரு. செ. கதிர்காமநாதன், திருமதி பற்றீசியா, திருமதி நேசமலர், திருமதி ரஞ்சனா ஆகியோரின் மாமியுமாவர். பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக, 34, காட்டுக்கந்தோர் ஒழுங்கை யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து 16-2-84 வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 825


## இன்று தீர்ப்பு

[கொழும்பு]

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மத்தியூபீரிஸ் வழக்கின் தீர்ப்பு இன்று புதன்கிழமை வழங்கப்படவுள்ளது.

வணமத்தியூ பீரிஸுக்கும், டெகிரின் இங்கிராமுக்கும் எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. [வெ]

## மாசி மகத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாசி மகத் திருவிழா நடைபெறவுள்ளது.

அன்று காலை 8 மணிக்கு அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அம்பாள் எழுந்தருளி பாலமுனையில் தீர்த்த உற்சவமும், அம்பாள் வீதி உலாவும், பின்னர் சங்காபிஷேகமும் நடைபெறும்.

## ஜனாதிபதி...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் தங்குவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. திரு. ஜெயவர்த்தனா ஜூன் மாதம் 18ம் திகதி ஜனாதிபதி றீகனை வெள்ளைமாளிகையில் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்துவார்.

ஜனாதிபதி செயலகத்தில் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே இந்தவிபரங்கள் தெரிவிக்கப்பட்டது (வெ)

## சங்கானை மக்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அறியவருகிறது

### ப. நோ. கூ. ச ஊழியர்களையும் பணயம் வைத்தனர்

இதேநேரத்தில் அண்மையிலுள்ள சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மின்தறி நிலைய ஊழியர்களையும் இரவு வேலையை நிறுத்துமாறு உத்தரவிட்டு, அவர்களையும் ஸ்தலத்தில் பணயம்வைத்து கொள்ளையர்களால் காவல் காக்கப்பட்டார்களாம்.

வங்கியின் தொலைபேசிக் கம்பிகளும் அறுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

### 'காஸ் சிலிண்டர்' மூலம் பெட்டியைத் திறக்க முயற்சி

வங்கிக்குள் இருந்த மூன்று இரும்புப் பெட்டிகளுக்குள் களவாடப்பட்ட மிகப் பெரிய இரும்புப் பெட்டியை 'காஸ் சிலிண்டர்' உதவியுடன் உருக்கி கொள்ளையை மேற்கொள்ள முயற்சித்தார்கள் என்றும், அது சாத்தியப்படாத பட்சத்தில் மேல்மாடியில் பணயம் வைக்கப்பட்டவர்களையும் அழைத்து அவர்களின் உதவியுடன் இரும்புப் பெட்டியை வான் ஒன்றில் ஏற்றிக் கொள்ளையர்கள் தப்பிச்சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### உருக்குவேலை ஊழியரும் கடத்தப்பட்டனர்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல தொழில்நுட்ப ஸ்தாபனத்தின் வான் ஒன்றும், இரும்பு, உருக்கு வேலை காஸ் மூலம் வேலை செய்யும் ஊழியர்களும் கடத்தப்பட்டு 'காஸ்' சிலிண்டர்களுடன் மக்கள் வங்கி கொள்ளைக்காகப் பயன்படுத்தப்பட்டார்களாம்.

சுமார் நான்கு மணிநேரமாக அவர்களால் இரும்புப்பெட்டியைத் திறக்கமுடியாது திணறடிக்க[illegible] இரும்புப் பெட்டியைக்[illegible] சென்றனர் என்ற[illegible]து தெரியவந்துள்ளது[illegible]

இரும்பு[illegible] வானில் ஏற்றிய பின்[illegible]யம் வைக்கப்பட்டிருந்த[illegible] எல்லோரும் விடுவிக்கப்[illegible]ளாம்.

இக்கொள்ளை[illegible]மாக மக்கள் வங்கி பி[illegible]லுவலக அதிகாரிகளு[illegible]கேசன்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் ஆர். எஸ். ஜெயபாலன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினரும் கொள்ளையரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கொள்ளை நடந்த இடத்தில் ஒரு சில தடயப்பொருட்களும் பொலிஸாரின் கையில் சிக்கியுள்ளதாம்.

### யாழ்ப்பாணம் வந்தனர்

நிலைமை இவ்வாறிருக்க மக்கள் வங்கித் தலைவர் திரு. எஸ். ரி. வே. பெர்னாண்டோவும், மக்கள் வங்கி பாதுகாப்புச்சேவை அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்காவும், நேரில் விசாரணைகளை கவனிக்கும்பொருட்டு யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

### அதுவும் 13 இதுவும் 13

நெல்லியடி மக்கள் வங்கிக் கொள்ளைமுயற்சி டிசம்பர் 13ம் திகதி நடந்தது. காத்தான்குடி மக்கள் வங்கிக் மூன்று கோடி ரூபா கொள்ளை கடந்த மாதம் பதின்மூன்றும் திகதி நடந்தது.

சங்கானை மக்கள் வங்கி 50 லட்சம் ரூபா கொள்ளை பதின்மூன்றும் திகதி நள்ளிரவு நடந்திருக்கிறது.

## காரைநகர் வாலி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொள்ளப்பட்டது. மனுதாரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா தமது சமர்ப்பணத்தில் "மரணம் சம்பவித்த இரவு இறந்தவருக்கும் வேறு சிலருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு கைகலப்பு நடந்ததாகவும் இதன் பின்னரே இறந்தவரின் சடலம் அவரது வீட்டின்கழுத்தில் கருக்கிட்ட நிலையில் காணப்பட்டதாகவும், இது தொடர்பான சாட்சியங்களை ஆஜர் செய்யமுடியும்" என்றும் தெரிவித்தார்.

மனுதாரான மு. அரியகுட்டி இதையடுத்து சாட்சியமளித்தார். இதைத் தொடர்ந்து மேல் விசாரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(வண்-நிரு)

## தமிழகத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக ஏராளமான தொழிற்சாலைகள் இயங்கவில்லை. மாநில அலுவலகங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [கு]

## வான் உரிமையா...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

சந்தியில் அனாதரவாக விடப்பட்டிருந்தது. பொலிஸார் வானைப் பொறுப்பேற்றுள்ளனர். (க)

## திருச்சி - யாழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலமே யாழ்ப்பாணம் செல்ல வேண்டியிருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கு நேராக விமானச் சேவை நடைபெற்றால் தமிழ்ப் பிரயாணிகளுக்கு இந்தச் சிரமம் இருக்காது, என்று திரு. ஜனார்த்தனன் தெரிவித்துள்ளார்.

## நகுலேஸ்வர ஆலய கொடியேற்றம்

[கீரிமலை]

கீரிமலை அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாசமேத நகுலேஸ்வர ஆலயத்தில் இன்றுகொடியேற்ற வைபவம் நடைபெறும் இம்மாதம் 29ம் திகதி ரதோற்சவம் இடம்பெறும்.

## பல்கலைக்கழக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொறியியல்பீட முதலாம் வருட மாணவர்கள் தங்கள் நிலைமை குறித்து ஜனாதிபதிக்கும், உயர் கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி ஸ்டான்லி கல்பகேக்கும் தனித்தனியே அனுப்பிவைத்துள்ளனர்.

"பாதுகாப்புத் திருப்திகரமாக இல்லையென்பதால் நாங்கள் வீடு திரும்பிவிட்டோம். உடனடியாகப் புதிய பொறியியற் பீடத்தைப் பாதுகாப்பான பிரதேசத்தில் ஆரம்பிக்கவும்" என்று அதிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

பேராதனை மொறட்டுவ பல்கலைக்கழகங்களின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த முதலாம் வருடமாணவர்கள் 120 பேர் பாதிக்கப்பட்டுத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருந்தனர். இவர்களில் 46 மாணவர்கள் திருப்பவும் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றனர் அங்கு பாதுகாப்பு நிலைமை இல்லாததால் மீண்டும் தங்கள் இடங்களுக்கு வந்துள்ளது தெரிந்ததே.

(மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம், [illegible] 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.